
Ο ΔΙΚ
ΑΒΡΑΑΜ
ST ABRAHAM

## புனித அபிரகாம் (4-ம் நூற்றாண்டு)

அபிரகாம் தம் பெற்றோரின் விருப்பத்திற்கிணங்கி மணம் முடித்தார். விரக்தராக வாழ விரும்பிய இவர் மணம் முடித்த அன்றே வீட்டை விட்டு ஓடிவிட்டார். இவரது நண்பர்கள் இவரைத் தேடி அலைந்தார்கள். 17 நாட்களுக்குப் பின் இவர் செபத்தியானத்தில் ஆழ்ந்திருந்ததை கண்டார்கள். அவர்களுடைன் செல்ல மறுத்துவிட்டார். இவர் தம் பெற்றோர்களுடைய சொத்துக்களை விற்று ஏழைகளுக்குக் கொடுத்தார். குருப்பட்டம் பெற்றார். விக்கிரக ஆராதனை செய்த மக்களுக்கு இவர் வேதம் போதித்து வந்தார். முதலில் இவரது சொற்கள் பயன் அளிக்கவில்லை. இவரை நிந்தித்து துன்புறுத்தினார்கள். இவரும் மனம் தளராமல் உழைத்து வந்தார். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு கடவுளின் வரப்பிரசாத உதவியால் பட்டணத்திலுள்ள மக்கள் அனைவரும் மனம் திரும்பினார்கள். மரி என்னும் உறவினள் ஒருத்தி அவருக்கு உண்டு. இவளுடைய பெற்றோர் இறந்து விட்டார்கள். இவளின் பொறுப்பை அபிரகாம் ஏற்று தனது குகைக்கு அருகில் ஒரு குடிசை கட்டி அதில் அவளை வாழச்செய்தார். அவளுக்கு ஞான வாழ்வைப் பற்றிப் போதித்தார். அவளும் புண்ணியவதியாக வாழ்ந்தாள். 20 வருடங்களுக்குப் பின் அவள் அந்த இடத்தை விட்டு ஓடி பாவ வாழ்வு நடத்தலானாள். அபிரகாம் இரண்டு ஆண்டுகளாக அவளைத் தேடி அலைந்தாள், தவறிப் போன ஆட்டை கடைசியாகக் கண்டுபிடித்து தமது உருக்கமான சொற்களால் அவளின் மனதை மாற்றினார். அவள் தன் குடிசைக்குத் திரும்பிதோடு தவறுக்காக எஞ்சிய வாழ்நாளெல்லாம் தவம் செய்தாள்.

**சிந்தனை:**

பாவிகளைத் தேடிச் செல்ல நம்மால் இயலாவிட்டால் நமது இடத்தில் இருந்து கொண்டே பாவிகளுக்காக செபித்து தவம் செய்து அவர்களை மனந்திருப்பலாம்.

**செபம்:**

பாவிகளுக்கு அடைக்கலமே, பாவிகள் மனந்திரும்ப வேண்டிக்கொள்ளும்.